# தகவலுக்கான உரிமை ஆணைக்குழு – செய்திப் பிரசுரம்

2017 பெப்ரவரி 10 – கொழும்பு – 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் (RTI) பயனுறுதியான செயற்பாடு தொடர்பாக பொதுமக்களின் ஆதரவும் அக்கறையும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு மிகுந்த ஊக்குவிப்பினை அளிக்கின்றது.

இந்தச் சட்டம் 2017 பெப்ரவரி 03ஆம் திகதி பகிரங்க அதிகாரசபைகள் (PAs) தொடர்பாக செயற்படுத்தப்பட்டது. 2017 ஜனவரி 29ஆம் திகதியும் பெப்ரவரி 02ஆம் திகதியும் செய்திப்பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் ஆணைக்குழுவின் பகிரங்க அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது. ஆணைக்குழு சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய மேற்பார்வை, கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கல் அமைப்பாகவும் அவ்வாறே மேன்முறையீட்டு விசாரணையாளராகவும் திகழ்கின்றது. நடைமுறைப்படுத்தும் அமைப்புகளும் தகவலுக்கான உரிமையைப் பயன்படுத்துவோரும் சட்டத்திற்கு அமைவாக இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதும் மேன்முறையீடுகளை விசாரிப்பதும், வழிகாட்டும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்ட நியதிச்சட்ட சுயாதீன குழுமம் ஒன்றாக இது செயற்படுகின்றது.

இலங்கைப் பிரசைகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்புகளில் பாரிய ஜனநாயகமயமாக்கலின் கூறாக இந்தச் சட்டம் ஆக்கப்பட்டது. அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அமைப்புகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் குழுமங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டு அக்கறையைக் கொண்டுள்ள கூட்டிணைந்த குழுமங்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண அதிகார சபைகள் அவ்வாறே நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நீதியை நிர்வகிப்பதற்கு தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பகிரங்க அதிகார சபைகள் மீது முக்கியமான புதிய சுய வெளிப்படைத்தன்மைக் கடப்பாடுகளை இது விதிக்கின்றது.

ஒப்பந்தம், உடன்படிக்கை, உரிமம் அல்லது பங்குடைமையின் கீழ் அரசாங்கத்துடன் செயலாற்றும் தனியார் அமைப்புகள், (அவற்றின் நியதிச்சட்ட அல்லது பகிரங்க சேவை அல்லது பணியைப் பொறுத்தவரை), ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது உரிமம் அளிக்கப்பட்ட அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில் அரசினால் நிதியளிக்கப்பட்ட உயர் கல்வி, தனியார் தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சேவை நல்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய தனியார் அமைப்புகளை இது உள்ளடக்கும்.

ஒரு சில விதிவிலக்குகளுக்கு மட்டும் அமைவாக (இவற்றினும் பொதுமக்கள் அக்கறை மேலோங்கும்) தற்போது இந்தப் பகிரங்க அதிகாரசபைகளிடம் உள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையை பிரசைகள் பெற்றுள்ளனர். சுயமாகவே தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக பகிரங்க அதிகார சபைகளுக்கான புதிய நெறிமுறைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

தற்காலிகமான இடத்தில் குறைந்த பணியாளர் தொகையுடன் இடைக்கால நிலையில் இன்னும் தொழிற்படும் இந்த ஆணைக்குழுவின் ஆரம்பகாலம் இதுவாகும். ஆயினும், எமது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுமம் பகிரங்கத் தகவல்களை நாடுகின்ற மற்றும் வழங்குகின்ற அனைவருக்கும் ஆதரவளிப்பதற்காக எமது நிபுணத்துவம் மற்றும் ஆற்றலுடன், உறுதியானதும் சுயாதீனமானதுமான தொழிற்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. இதற்காக, நாம் கட்டணங்கள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பான விதிகளை ஆக்கி, 2017 பெப்ரவரி 03ஆம் திகதி, வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தகவலுக்கான உரிமை சட்டத்தின் பயனுறுதியான நடைமுறைப்படுத்தல் தொடர்பாக இணைந்த முகவராண்மை, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றுக்கு பின்னூட்டல்களை வழங்கியுள்ளோம். (http://documents.gov.lk/files/egz/2017/2/2004-66_E.pdf).

ஒழுங்குவிதிகள், மற்றும் பலவற்றுடன், சுயமாக தகவல்களை வெளியிடும் கடப்பாடுகளை வலுவூட்டி, தகவல் அலுவலர்களின் நியமனத்துக்கும் அவ்வாறே, பகிரங்க மீள் பயன்பாட்டுக் கொள்கைக்குமான தகவுதிறன்களை விதித்துரைக்கின்றன. விதிகள் பொதுமக்கள் சார்பான கட்டணப் பட்டியலை விதித்துரைத்து, மேன்முறையீடுகளின் முறைசாரா விசாரணைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் அல்லது ஆணைகுழுக்கு செய்யப்படும் மேன்முறையீடு வெற்றிகரமானது எனக் கண்டால், அந்தத் தகவலுக்கு கட்டணம் விதிக்கப்படாது என விதிவிலக்கையும் குறிப்பிட்டுள்ளது.

தகவலுக்கான உரிமை சட்டத்தின் அடிப்படையான குறிக்கோளாகிய பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையான கலாசாரத்தை இலங்கையில் கொண்டுவருவதற்கு பிரசைகளின் பங்கேற்பும் பின்னூட்டலும் அவசியமானவை என்பதை ஆணைக்குழு குறிப்பிடுவதுடன் இதுதொடர்பாக பொதுமக்களின் உயிர்ப்பான ஈடுபாட்டையும் எதிர்பார்க்கின்றது.

விலாசம் : அறை இல. 203-204, பிளம்ஜசிளச், பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி : 011 2691626
தொலைநகல் : 011 2691625